திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 21 | வீச்சு 23
சென்னை, 5—2—49

எலும்புக்கூட்டிற்கு மணிமகுடம்!

செத்துப்போன சமஸ்கிருதத்தை இந்தியாவின் தேசிய மொழியாக்க வேண்டுமென்று பிராமண குல தலைவர்கள் பலர் இந்திய சர்க்காருக்கு யோசனை கூறியிருக்கின்றனர்!

நாடு $1\frac{1}{2}$ அணா. | வெளிநாடு 2 அணா.
ஆண்டு சந்தா ரூ. 5 | ஆண்டு சந்தா ரூ. 6½

அவர்கள்—அங்கே! நாம்—இங்கே!

★

ஜன்னல் ஆபரேஷன்!

★

"டிக்—டிக்—டிக்!"

மிகவும் மென்மையான இந்த ஒலி அவள் காதுகளை வந்து தாக்கிற்று. அவளை அவளே நம்ப முடியவில்லை! கூர்ந்து கவனித்தாள்.

"டிக்—டிக்—டிக்!"

"டிக்—டிக்—டிக்"

"டிக்—டிக்—டிக்"

ஆம்! உண்மையாகவேதான் இந்த மூன்று அசைகள், வரிசை வரிசையாக, அடுக்கடுக்காக, மீண்டும் மீண்டும், அவள் காதுகளில் விழுந்துகொண்டிருந்தன!

ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த அவள் — அந்த இளம் பெண்—கடல் அலைகளைப் போல வரிசை வரிசையாக ஆனால் மிக மெல்லியவாக எழுந்துகொண்டிருந்த இந்த ஒலி அலைகளை முதன் முறை செவிமடுத்தாள்—நம்பவில்லை! இரண்டாம் முறை செவிமடுத்தாள்— நம்பிக்கை பிறக்கவில்லை. மூன்றும் முறை! அப்போதும் அவளால் நம்பமுடியவில்லை. இப்படியெல்லாம் தன் செவிகள் பற்பல ஓசைகளைக் கேட்டு உணர்வதாகத் தன் உள்ளம் மனக்கோட்டை கட்டுவதால் ஏற்படும் ஒலிகள்தானே தவிர, இவை, உண்மையாகவே தன் செவிகள் கேட்கும் ஒலிகள் என்பதை அவளால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை! ஆனால், நான்காம் முறை ஐந்தாம் முறை ஆறும் முறை ஏழாம் முறை.........மீண்டும் மீண்டும் இந்த ஒலிகள் கேட்டுக் கொண்டேயிருந்தன! பிறகும் அவளால் நம்பாமல் இருக்க முடியவில்லை. இந்த "டிக்—டிக்—டிக்" உண்மையாகவே தன் செவிகளில் விழத்தான் செய்கின்றன என்பதை அறிந்தவுடன், துக்கம் தோய்ந்த முகத்தினளாய், சோம்பிச் சுருண்டு படுத்துக் கொண்டிருந்த அவள், துள்ளிக் குதித்து எழுந்தாள்! அவள் கண்களில் புதிய ஒளி பிறந்தது! இதழ்களில் புன்முறுவல் பூத்தது! முகம், அன்றலர்ந்த தாமரையாயிற்று. மருட்சி, மகிழ்ச்சி,—இந்த இரு வேறு உணர்ச்சிகளும் ததும்பும் தன் கண்களாலே தன்னைச் சூழ இருந்த பொருள்களை எல்லாம் ஒரு முறை பார்த்தாள். ஒவ்வொரு பொருளும் புதிய அழகும் வண்ணமும் பொலிவும் பெற்று, புதிய வடிவுடன் திகழ்வதுபோல அவளுக்குத் தோன்றிற்று. வெள்ளை வெளேரென்று புதிதாகச் சுண்ணாம்பு அடிக்கப்பட்ட அறைகளைக் காண்பதுபோல் இருந்தது அவளுக்கு இந்த உலகத்தை இப்போது கண்டபோது!

"டிக்—டிக்—டிக்!"

"டிக்—டிக்—டிக்!"

அந்த ஒலிகள் ஓயவில்லை! தொடர்ச்சியாக அவள் காதுகளை அச் சிற்றொலிகள் வந்து தாக்கிக் கொண்டே இருந்தன!

அந்த ஒலிகள் செவிகளிலே வந்து விழ விழ அவள் முகத்திலே அரும்பிய புன்னகை, குறுஞ்சிரிப்பாக மலர்ந்தது; சிரிப்பு, எக்காளமாக மாறிற்று; எக்காளம் ஆநந்தத் தாண்டவமாகவும் ஆயிற்று!

அடைந்த மகிழ்ச்சியை அவளால் தாங்கமுடியவில்லை! டாக்டர் டாக்டர் என்று கூவினாள்! அவள் போட்ட அக்கூச்சல் அவள் செவிகளிலேயும் விழுந்தது; அந்த ஆஸ்பத்திரி முழுமையும் எதிரொலித்தது. தன் குரல் ஒலி தன் செவிகளிலே விழுந்ததையும் ஆஸ்பத்திரி முழுவதும் எதிரொலி கிளப்பியதையும் கண்டபோது கட்டுக்கு அடங்காத ஆநந்தம் அந்தச் சிற்றிடையாளைக் கட்டித் தழுவி மகிழ்ச்சி செய்தது!

"டாக்டர்! டாக்டர்!"

மறுபடியும் கூவினாள். மி[illegible] நீண்ட, அகலமான, பெரியதோ[illegible] ஹாலில், வரிசை வரிசையாய்ப்பல அறைகள்! அதிலே ஒன்றில் இவள் படுத்துக்கொண்டிருந்தாள். டாக்டர், இவள் போட்ட கூச்சலை கேட்டு, ஹாலின் கோடியில் இருந்தவர் மெதுவாக இவள் இருந்த இடத்தை நோக்கி வந்தார்.

டாக்டர் அப்படி வந்து கொண்டிருந்த போது, அவருடைய கால்களிலே அவர் அணிந்து கொண்டிருந்த 'பூட்ஸ்' டக் டக் டக் என்று ஓசை கிளப்பியது. அந்த ஓசையும் அவளுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

டாக்டர் அவள் அருகே வருவதற்குள், அந்த பூட்ஸ் ஓசை அவள் செவிகளைத் தாக்குவதற்குள், அவள் எத்தனையோ ஓசைகளைச் செவிமடுத்து விட்டாள்! தூரத்திலே இருக்கிற குழாய்களிலிருந்து தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்த சிறு ஒலி, நர்சுகள் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளும் முணுமுணுப்பு, தெருவிலே ஓடும் மோடார் கார் போடுகிற 'ஹார்ன்' சப்தம், எங்கெங்கேயோ யாரோ பேசுகிற ஒலிகளின் கூட்டுமொத்தக் குழப்ப ஒலி, அடுத்த அறை பக்கத்து அறைகளில் உள்ள நோயாளிகளின் முனகல் சப்தம்—இப்படி, பல்வேறு சாதாரண ஒலிகள் பல கோணங்களிலிருந்தும் வந்து வந்து அவள் செவிகளில் பாய்ந்தன. இந்த ஒலிகளையெல்லாம் கேட்கும்போது, நமக்கு சாதாரணமாக, ஒரு வெறுப்பு அல்லது அலட்சியம்தான் தோன்றும். ஆனால் அவளுக்கோ [illegible]

...ந்த சாதாரண ஒலிகள் ஒவ்வொன்றும் உள்ளத்தை உருக்கும் உயரிய இசைப் பாட்டுகளாகத் தோன்றின. இந்த "இன்னிசைக் கீதங்களை" மிக மிக வியப்போடும் உருக்கத்தோடும் உல்லாசத்தோடும் கேட்டுக்கொண்டிருந்தாள் அவள்.

டாக்டர் வந்தார்.

"மேரி! ஏன் கூப்பிட்டாய்?"

"வணக்கம் டாக்டர் வணக்கம் தங்கட்கு ஆயிரம் வணக்கம். நான் உயிருடன் உள்ளவரையில் தாங்கள் செய்த இந்த ஒப்பற்ற உதவியை மறக்க மாட்டேன்."

"உபசார மொழிகள் இருக்கட்டும் அம்மா, விஷயம் என்ன அதைச் சொல்லு! காது நன்ருகக் கேட்கிறதா?"

"ஆஹா! அருமையாகக் கேட்கிறது டாக்டர்! படுத்துக்கொண்டேயிருந்தேன். இத்தனை நாள் இருந்ததைப்போல மிகவும், வருத்தத்தோடு, காதாவது இனி நமக்குக் கேட்பதாவது என்ற சலிப்பு மிகு சிந்தனையோடு புரண்டு கொண்டிருந்தேன். திடீரென்று—பத்து நிமிஷம் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன்—அப்போது, டிக்—டிக்—டிக் என்ற சப்தம் கேட்டது. முதலில் என்னையே நான் நம்பவில்லை. உண்மையில் சப்தம் கேட்கவில்லை-சப்தம் கேட்பதாக மனம் கற்பனை செய்து மகிழ்கிறது—அவ்வளவுதான் என்றெண்ணினேன். ஆனல் தொடர்ச்சியாக அந்த டிக் டிக் டிக் ஒலி கேட்டுக்கொண்டே யிருந்தது. பிறகுதான், டாக்டர் அந்த ஒலி என் மனக் கற்பனை அல்ல, வெளியே 'வராந்தா'வில் உள்ள பெரிய கடிகாரத்தின் நிமிஷ முள் அசைவதால் ஏற்படும் உண்மை ஒலி என்பதைத் தெரிந்துகொண்டேன், அந்த ஒலிகள் உண்மையாகவே என் காதுகட்குக் கேட்கின்றன—நான் இனி செவிடு அல்ல என்பதை அறிந்துகொண்டேன், மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன், தங்களைக் கூவி அழைத்தேன்! இழந்துபோன என் செவிகளையே எனக்கு மீட்டுத் தந்த தங்களுக்கு, டாக்டர், நான் என்ன உதவி செய்யப்போகிறேன்! தங்களை நான் எப்போதும் மறக்க மாட்டேன் டாக்டர் தங்களை எப்போதும் மறக்க மாட்டேன்."

* * *

மிஸ் மேரி ஜார்ஜ், இளம் பெண்! பவுன் நிற மேனி, பளிங்கு போன்ற முகம், கூரிய கண்கள், இளமையின் எழில் ததும்பும் சிவந்த கன்னங்கள், முத்துப் பற்கள், அவற்றை வெளியே சிந்திவிடாதபடி பாதுகாப்பதற்கென்றே அமைந்த அழகிய அதரங்கள் இவ்வளவும் படைத்த எழில் நிலையம் அவள்! எழில் மட்டுமல்ல அவளிடம் இருப்பது தங்கமான குணம், நல்ல அறிவு, கூரிய சிந்தனை சக்தி இவ்வளவும்! என்ருலும் அவளிடம் ஒரு குறை இருந்தது, மிக முக்கியமான குறை—அவள் செவிடு! அழகின் சின்னமாக இருந்தும் செவிடாக இருந்தாள் அந்தச் சேல்விழியாள்! எனவே அவள் மட்டுமல்ல அவளுடைய குடும்பத்தார் அனைவருமே அதற்காகக் கண்ணீர் உகுத்தார்கள்!

இப்போது அவளுக்கு வயது 25. அவள் 11 வயது சிறுமியாக இருந்தபோது பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள். 10 வயது வரை அவள் காதுகள் நன்ருகவே இருந்தன. பிறகு தான் கொஞ்சம் கொஞ்சமாக செவிப்புலன் மந்தமடையலாயிற்று. முதலில் அவள் செவிடாகிக்கொண்டு வருகிருள் என்பதேகூட யாருக்கும் தெரியாமல் இருந்தது — அவளுக்கும்தான் தெரியவில்லை! படிப்பில் கெட்டிக்காரியாக இருந்தவள் கொஞ்சம் கொஞ்சமாக "கடைசி பெஞ்சிக் காரி"யானுள்; குணவதியாக இருந்தவள் பொல்லாத சிறுமியானுள்; குறும்பும், படிப்பில் கவலையின்மையும், பெற்றோர் சொல் கேளாமையும் நாளுக்கு நாள் வளர்ந்தன. "தங்கக் கட்டி"யாக இருந்த தங்கள் அருமைப் புதல்வி ஏன் இப்படி முற்றிலும் மாறிப் போனுள் என்பதை அறியாமல் நீண்ட நாள் திகைத்தனர் பெற்ருேர். நாளாக ஆக, மேரி, கண்களை ஒருவிதமாகப் பார்ப்பதையும், காதுகளை ஒரு மாதிரி சாய்த்துக் கேட்பதையும், எதையோ எங்கேயோ போட்டுவிட்டு அதையே எப்போதும் தேடிக்கொண்டிருப்பதைப் போன்ற தோற்றத்துடன் காணப்படுவதையும் கண்டு கவலை கொண்ட பெற்ருேர் தங்கள் குடும்ப டாக்டரிடம் காட்டி விஷயம் என்ன என்று கேட்டனர். பிறகுதான் தெரிய வந்தது அவள் காதுகள் மந்தமாகிக் கொண்டு வருகின்றன என்னும் திடுக்கிடத்தக்க உண்மை. பிறகு கேட்க வேண்டுமா, ஒரு டாக்டரிடமிருந்து இன்னொரு டாக்டர், ஒரு ஸ்பெஷலிஸ்டிடமிருந்து மற்ருெரு ஸ்பெஷலிஸ்ட் என்று இப்படி எத்தனையோ டாக்டர்களிடம் சென்று எவ்வளவோ பணத்தைச் செலவழித்தாயிற்று. பலன் மட்டும் பூஜ்யம்! கடைசியில் ஒரு டாக்டர்—அவர் மிகப் பெரிய டாக்டர் என்று புகழ் படைத்தவர் — பின் கண்டபடி "தீர்ப்பு" அளித்துவிட்டார். பெற்ருேர்கள் வேறு வழியின்றி அதை ஒப்புக்கொண்டு தீரவேண்டியதாகி விட்டது. டாக்டர் தீர்ப்பு: "ஆடோஸ்லெரோசிஸ்—வளர்ந்து கொண்டே வரும் செவிட்டுத்தனம்—தடுக்கக்கூடிய தக்க மருத்துவம் கிடையாது!"

செவிட்டுத்தனம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேவந்தது, 24 வயது ஆனபோது, மேரியின் ஒரு காது முழுச்செவிடாகிவிட்டது, மற்ருெரு காது ஏறத்தாழ அந்த நிலையை நெருங்கிக் கொண்டிருந்தது மருத்துவம் இதற்கு உலகிலேயே கிடையாது ஆகவே என் செய்வது என்று, மேரியும், அவள் கணவனும்—இடைக்காலத்தில் அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது பெற்ருேரும், உடைந்த உள்ளத்தினராய், சும்மா இருந்து விட்டனர்.

மேரி ஒருத்தி அல்ல, ஆயிரமாயிரம், அமெரிக்காவில்! ஆடோஸ்லெரோசிஸ்—வளர்ந்து கொண்டே வரும் செவிட்டுத்தனம், அமெரிக்காவில் ஆண்டுதோறும் பலரைக் கொள்ளைகொண்டு விடுகிறது. அவர்கள் அத்தனைபேரும் அழகிகளாக இல்லாமல் இருக்கலாம், ஆனல் அழகிகளுக்கு மட்டும்தானு காதுகள் தேவை! இந்த நோய், ஒருவரிடம் குடியேறும்போது, காது வலிப்பதில்லை, சீழ் வடிவதில்லை, காதுகளிலே வண்டுகளின் ரீங்காரத்தைப் போன்ற மெல்லிய ஒலி ஒன்று ஏற்படுவதைத் தவிர வேறு எத்தகைய வெளிப்படையான அடையாளமும் ஏற்படுவதில்லை. எனவே தான் இந்த நோய் மிகவும் பயங்கரமானதென்று கருதப்படுகிறது. உறுமிக்கொண்டே வரும் புலியைவிட, ஓசைப்படாமல் வரும் நாகம்தானே அதிக கேடு தரக் கூடியது!

அமெரிக்க விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகவே இந்தப் பயங்கர நோய்க்கு ஒரு மாற்று கண்டுபிடித்

(10-ம் பக்கம் பார்க்க)

மனுதர்மம்—புதிய பதிப்பு!

"மனுதர்ம சாஸ்திரம் கொடுமையின் உறைவிடம் ஆகவே அதை நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டும்" என்று நாம் கூறும்போது, "மனுவாவது மாந்தாதாவாவது. அவர்கள் சட்டம் இக்காலத்தில் ஏதப்பா, அதுபற்றி அநாவசியமாக நீவிர் கிளர்ச்சிகள் பல புரிவது ஏனப்பா?" என்று காங்கிரஸ் திராவிடர்கள் பலர் கேட்பது வழக்கம். ஆனால் அவர்கள் அறிவதில்லை, மனு இக்காலத்திலும் உலவுகிறான் "இந்து லா" (Hindu law) வடிவில், ராஜோபசாரத்தோடு, என்பதை! ஒரு குலத்துக்கொரு நீதி வகுக்கும் கொடுமை, மனுதர்மத்தின் தனி உடைமை! அதே கொடுமை, இன்றையதினம் திராவிடர்களைக் கட்டியாளும் "இந்து லா" சட்டத்தில் எண்ணற்ற இடங்களில் தாண்டவமாடுவதை நாம் தாராளமாக எடுத்துக் காட்டமுடியும் ஆகவே மனு மறைந்துவிட்டான் என்று பேசுவதோ, அவன் வகுத்த புரோகித ஆட்சிமுறை அழிந்துவிட்டது என்று கூறுவதோ, அவன் உள்ளத்தில் குடியேறியிருந்த ஜாதித் திமிர் • தென்னாப்பிரிக்காவில் பிரதமர் மலான் வடிவிலும் மார்ஷல் ஸ்மட்ஸ் வடிவிலும் மட்டும்தான் இருக்கிறது என்று புகல்வதோ அர்த்தமற்ற பேச்சு! "இந்து லா" புத்தகத்தை ஒரு முறை புரட்டிப் பார்க்கும் எவரும் எளிதில் உணர்வர், மனு, அந்தப் புத்தகம் முழுவதிலும் தன் ஆணவ முத்திரையைப் பொறித்து வைத்துள்ளான் என்ற உண்மையை!

ஆனால், நாம், "மனுதர்மம்—புதிய பதிப்பு" என்று குறிப்பிடுவது அந்த "இந்து லா"வை அல்ல, அது மனுதர்மத்தின் பழைய பதிப்பேதான்—புதிதல்ல! ஏறத்தாழ மனுவின் சொற்களும் மற்றொரு மனுவாகிய யாக்ஞவல்யர் சூத்திரங்களுமே "இந்து லா"வின் அடிப்படை, சுவர், தளம், மாடி எல்லாம்! ஆகவே நாம் குறிப்பிடுவது அந்தப் பழைய பதிப்பை அல்ல, 31-1-49-ல் ஓமந்தூர் சர்க்கார் வெளியிட்டுள்ள புதிய பதிப்பை!

ஜனவரி 31-ல், சென்னை சர்க்கார், ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தைச் சார்ந்த மாணவர்கள்மீதுள்ள வழக்குகள் யாவற்றையும் உடனடியாக வாபீஸ் பெறுமாறு அதிகாரிகளுக்கு உத்தர விட்டிருக்கிறார்கள். ஆனால் அதே ஜனவரி 31-ல் அண்ணாமலை நகரில் திராவிட மாணவர்கள் நால்வர் மீதும் திராவிட மாணவர் தலைவர் **மதியழகன்** மீதும் சர்க்காரால் தொடுக்கப்பட்ட வழக்கில் நண்பர் மதியழகனுக்கு 6 வார கடுங்காவலும், ஏனையோருக்கு 3 மாத கடுங்காவலும் விதிக்கப்பட்டிருக்கிறது

ரா. சு. சே. மாணவர்கள் பெரிதும் ஆரியர்கள், தவறினால் அவர்கள்தம் தொண்டரடிப் பொடி ஆழ்வார்கள்! நண்பர் மதியழகன் முதலானவர்களோ திராவிடர்கள்! ஆரிய மாணவர்கள் மீதுள்ள வழக்கு வாபீசாகிவிடுகிறது, திராவிட மாணவர்கள் மீதுள்ள வழக்கு வாபீசாகவில்லை—3 மாத **கடுங்காவல்** அவர்கட்குத் தண்டனை தரப்படுகிறது!! சென்னை சர்க்காரின் விபரீதப் போக்கு இது. ஆரியர்க்கு ஒரு நீதி! திராவிடர்க்கு ஒரு நீதி! மனுதர்மத்தின் புதிய பதிப்பு!

ரா. சு. சே. சங்கம் ஒரு பயங்கரமான கழகம், உலக உத்தமர் காந்தியாரையே ஈவு இரக்கமின்றி சுட்டுக்கொன்ற நாதுராம் விநாயக் கோட்சேக்களின் மன்றம், இந்துமத வெறிப் பாம்புகளின் புற்று! அவர்கள், நாட்டிலே பரப்புவது, விஷம்! அவர்கள் பணியின் விளைவு தான்—அவர்கள் செயலை "பணி" என்று புகல்வதே அந்த உயரிய சொல்லுக்கு அவமானம் — அவர்கள் பணியின் விளைவுதான் வடநாட்டில் அடிக்கடி எழுகின்ற வகுப்புவாத பூகம்பங்கள்! என்றாலும் ஓமந்தூரார் அந்த வெறிச்செயல் கழகத்தாரை விடுதலை செய்துவிட்டார் ஆனால் அத்தகைய வெறியர்கள் உமிழும் விஷத்தின் கொடுமையிலிருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றும் நற்பெருந்தொண்டு புரியும் திராவிட மாணவ மணிகளுக்கோ அவர் தந்த பரிசு 3 மாத கடுங்காவல்! காரணம், அவர்கள் பூதேவர்கள், இவர்கள் சூத்திரர்கள்! ஆரியர்கள் கொடிய கொலையே புரிந்துவிட்டாலும் கூட அவர்களை ஊருக்கு வெளியே வேண்டுமானால் கொண்டுபோய் விடலாமே தவிர அவர்கட்கு எத்தகைய தண்டனையும் தரக்கூடாது! ஆனால் சூத்திரர்கள், யாரேனும் வேதம் ஓதுவதை அருகிருந்து கேட்டாலுங்கூட, அது மன்னிக்க முடியாத மகத்தான குற்றமாகிறது; அவர்கள் செவியில் கொதிக்கும் ஈயம் ஊற்றப்படவேண்டும் தண்டனையாக! மனு காட்டும் நெறி இது! இதனை அப்பழுக்கின்றி நிறைவேற்றுகிறார் ஓமந்தூரார்! ரா. சு. சே. மாண

வர்க்கு விடுதலை! திராவிட மாணவர்க்குக் கடுங்காவல்! இந்த இரண்டு உத்தரவுகளும் ஒரே நாளில் பிறப்பிக்கப் படுகின்றன! என்ன நெஞ்சழுத்தம்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், சென்ற ஆண்டு, காங்கிரஸ் மாணவர்கள், பெரியார் விழா நிகழ்ந்த அன்று, கழகக்கொடியை இறக்கினர், வம்பும் தும்பும் விளைத்தனர், திராவிட மாணவரை வலுச் சண்டைக்கு அழைத்தனர், வீண் சண்டைக்குப் போக விரும்பாத அவர்களை வலிய வலிய அடித்தனர். இரவில், கல்லூரி விடுதியில், தத்தம் அறைகளில் திராவிட இளைஞர் ஏறுகள் உறங்கிக்கொண்டிருந்த ஞான்று கதவை உடைத்துக் கொண்டு உட்புகுந்து அவர்களை இழுத்துப்போட்டு அடித்தனர் மாற்றுக் கட்சி மாணவர்கள்! ஆனால் நம் மாணவர்கள் பொறுமையையே அணிகலனாகக் கொண்டனர், அமைதியையே கட்டிக் காத்தனர், சீர்திருத்தப் பாதையில் செல்வோர்க்கு இத்தகு கொடுமைகள் நிகழ்வது சகஜம் என்றெண்ணி மன ஆறுதல் பெற்றனர், உள்ளூர் போலீஸ், காங்கிரஸ் மாணவர் பன்னிருவர்மீதும் திராவிடமாணவர் ஐவர் மீதும் வழக்குத் தொடுத்தனர், ஆனால் சர்க்காரோ உடனடியாக காங்கிரஸ் மாணவர் மீதுள்ள வழக்குகளை வாபீஸ் பெற்றனர், திராவிட மாணவர்க்குமட்டும் தண்டனை கிடைக்கும் நிலையை உண்டுபண்ணினர்! அடித்தவர் தப்பினர், அடிபட்டவர் சிக்கினர்! **தங்கள் கட்சிக்கு ஒரு நீதி! மாற்றுக் கட்சிக்கு மற்றொரு நீதி! ஒரு கண்ணுக்கு வெண்ணெய்! மற்றொரு கண்ணுக்கு சுண்ணாம்பு! —ஓமந்தூரார் கடைப்பிடித்த நீதி சாஸ்திரம் இது! இது, மனுதர்ம சாஸ்திரத்தின் மறுபதிப்பு அல்லாமல் வேறென்ன?**

ஒரே வழக்கில் ஒரே போலீசாரால் ஒரே கோர்ட்டில் குற்றவாளிகள் என்று சொல்லி நிறுத்தப்பட்டவர்களில் 12 பேருக்கு விடுதலை, 5 பேருக்கு மட்டும் விசாரணை! காரணம் 12 பேர் உடலிலே இருந்தது கதர் சட்டை, ஏனையோர் உடலிலே

(12-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

கூட அவருடைய உள்ளத்துக்கும் ஆத்மாவுக்கும் இடையே நடந்து வந்த இந்த இடையீடு அற்ற போராட்டமானது கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டுகளால்தான் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதே தவிர வேறில்லை.

"இவ்வளவையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, இன்று, நாடாளும் பொறுப்பில் இருக்கும் சர்க்கார் காந்தியத்துக்கு மிக மிக மாறானதோர் சர்க்கார் (A very un-Gandhian Government) என்பது தெள்ளத் தெளிய விளங்குகின்றது.

"வேண்டியவர்கட்கும் சொந்தக்காரர்கட்கும் பதவி தேடித்தரும் பித்தலாட்டம், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படும் கொடுமை, பிரிட்டானியர் ஆட்சியில் கண்டிக்கப்பட்ட அதே முறைகளை நிலையாகக் கையாளும் தன்மை, திறமைக்கு மதிப்பற்ற நிலைமை, வெளிநாட்டுத் தலைநகரங்களில், நம் நாட்டுக்கு உபயோகமற்ற காரியங்களுக்காக, உதவாக்கரைகளை, வெளிநாட்டுத் தூதுவரென்றும் இதுவென்றும் அதுவென்றும் உயர் பதவி கொடுத்து தூக்கி வைத்து ஏராளமான செல்வத்தை 'அது'களுக்காக வாரி இறைக்கும் தாராளம், அரசாங்கத்திற்கும் கொள்ளைக்கார முதலாளிகளுக்குமிடையே உள்ள வெறுக்கத்தக்க கள்ளக் காதல், 'பெர்மிட்' களைக் கொண்டு கொள்ளை லாபம் சம்பாதிக்கவேண்டும் என்று எம். எல். ஏ. க்களும் காங்கிரஸ் முக்கியஸ்தர்களும் பித்துப்பிடித்தலையும் விபரீதம், ஒழுங்காக நடைபெறும் சர்க்கார் காரியாலய நடைமுறைகளில் அருவருக்கத்தக்க சொந்த இலாபங்களுக்காக அடிக்கடி குறுக்கிட்டு 'ஏதேதோ' செய்யும் மந்திரிகளின் நடத்தை —இவ்வளவையும் சேர்த்துப் பார்த்தால், மகாத்மாவின் ஆத்மீக வார்சுதார்கள் என்று பெருமையடித்துக்கொள்பவர்களும் இன்று சர்க்கார் பீடங்களை அலங்கரிப்பவர்களும் ஆகிய காங்கிரஸ்காரர்கள் மகாத்மாவின் உபதேசங்களை எவ்வளவு தூரம் காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள் என்பது நன்கு புலனாகிறது!"

புலனாகிறது, நமக்கு மிக நன்றாகப் புலனாகிறது. ஆகிற காரணத்தால்தான் கேட்கிறோம், உள்ளத்தில் இவ்வண்ணம் காந்திய தத்துவங்களையும் நடைமுறைத் திட்டங்களையும், அடியோடு வெறுத்து ஒதுக்குபவர்கள், 'சுதந்த்ரா'வின் மொழி வழி மொழிவதானால், காற்றிலே பறக்க விடுபவர்கள், எதற்காக 30-1-49 அன்று மட்டும் உதட்டளவிலே காந்தியாரை வானளாவப் புகழவேண்டும்? அவர்களின் உள்ளம்—உதடு இரண்டிற்குமிடையே "விவாகரத்து" ஆகிவிட்டதா? அல்லது எப்போதுமே அவர்களுடைய உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே சுமுகமான உறவு கிடையாதா? இரண்டும் இரு துருவங்களா? அல்லது அவர்களின் உள்ளம் கருதுவதற்கு நேர் மாறானதையே அவர்களின் உதடுகள் கூறித்தீர வேண்டும் என்பது எந்த முனிசிரேஷ்டரேனும் அவற்றிற்கு இட்ட சாபமா? இல்லை, அவர்களின் உள்ளம் உதடு இரண்டின் இயற்கை அமைப்பே ஒன்றுடன் ஒன்று முரண்பட்டதுதானா? என்ன காரணம் தேசியவாதிகளின் உள்ளம், உதடு இரண்டிற்குமிடையே இவ்வளவு மகத்தான வித்தியாசம் இருப்பதற்கு? வேடிக்கைக்கு அல்ல. விளையாட்டிற்கு அல்ல, உண்மையாகவே நாம் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறோம், என்ன காரணம்?

———

போர்வாள்

5—2—49 சனிக்கிழமை

உள்ளமும் உதடும்!

★

ஓர் ஆராய்ச்சி!

★

நாடெங்கும் பிரார்த்தனைகள்!

கிராமங்களிலெல்லாம் பஜனைகள்!

கோயில்கள் தோறும் அர்ச்சனைகள், ஆராதனைகள், புரோகிதர்க்குத் தட்சணைகள்!

ஊர்கள் தோறும் மகத்தான கூட்டங்கள்! அந்தக் கூட்டங்களிலெல்லாம் உருக்கமான சொற்பொழிவுகள்! சொற்பொழிவு தொடங்குமுன்னால் பகவத்கீதை பாராயணங்கள்! வேதோபதேசங்கள்! உபநிஷத்துகளின் உச்சாடனங்கள்!

முக்கிய நகரம் ஒவ்வொன்றிலும் மாபெரும் நூல் நூற்பு யக்ஞங்கள்! இடையீடு இல்லாத பஜனைகள்! நடுவே நிறுத்தாத நூல் நூற்புப் பிரார்த்தனைகள்!

சேவாக்கிராமத்தில் காலை 5 மணி முதல் 12 மணி நேரம் தொடர்ச்சியாக நூல் நூற்றல் ஜபம்! நாகபுரியில் 80 மணிநேரம் ஜபம்! சென்னையிலும் அப்படியே! பம்பாயிலும் அதுபோலவே!

கூட்டம் கூட்டமாகக்கூடி இளம்பெண்கள் "ராம் துன்" பாடும் காட்சி, அவர்கள் அருகே ஆயிரம் ஆயிரமாக தூயவெண் கதருடைதரித்த வாலிபர்களின் பகவத் பாராயணம்! இவற்றிற்கெல்லாம் மந்திரிகள், தலைவர்கள், பிரதானிகள் ஆகியோரின் தலைமை!

அங்கங்கே உண்ணா நோன்புகள், மௌனவிரதங்கள், கொடியேற்றும் திருவிழாக்கள், கொடியைப் பாதி இறக்கிவைக்கும் சடங்குகள், நிதி வசூல் உண்டிகள்!

காந்தியடிகளின் 'புனிதமான' அஸ்தி கரைக்கப்பட்ட 'புண்ணிய' நதிகளைத் தரிசிக்க மக்கள் சாரை சாரையாகச் செல்லும் அற்புதம்! அந்த நதிகளிலே நீராடிவிட்டு பஜனை பாடிக்கொண்டே தக்ளியக்ஞம் செய்துகொண்டே அவர்கள் கூட்டம் கூட்டமாகத் திரும்பும் நிகழ்ச்சி!

அடிகளாரின் சமாதி உள்ள ராஜகட்டத்தில் கண்ணீரும் கம்பலையுமாக லட்சக்கணக்கான மக்களின் கூட்டம்! அவர்களிடையே நேரு, படேல், ஆசாத் ஆச்சாரியார், பட்டாபி போன்ற தலைவர்கள் உருக்கமான தோற்றத்துடன் அமர்ந்து, பார்ப்பவர் நெஞ்சைக் கரைக்கும் சம்பவம்!

பிரதமர் நேருவிலிருந்து சாதாரண தொண்டர்வரை மறைந்த மாவீரரின் தியாகத்தைப் பற்றியும் தீரத்தைப்பற்றியும் வீரத்தைப்பற்றியும் விவேகத்தைப் பற்றியும் சொன்மாரி பொழிய, அதை, பத்திரிகைகள் எல்லாம் வண்ணப் படங்கள் விதவிதமாக ஜொலிக்க ஆடம்பரத்தோடு வெளியிட, அதை மக்கள் ஆநந்தத்தோடு பார்த்து "அற்புதம்! அற்புதம்!" என்று சிரம் அசைத்துக் கரம் குவிக்கும் காட்சி!

"காந்திஜியின் ஆத்மிக ஒளி இத்தனை நாள் போலவே இனியும் நமக்கு வழிகாட்டும்!"

"மகாத்மா நம் உள்ளத்தில் மூட்டிய ஜீவ ஜ்வாலை இன்னமும் தேஜோமயமாய்ப் பிரகாசித்துக் கொண்டு தான் இருக்கிறது!"

"அந்த ஜீவ ஜ்வாலை இருந்துகொண்டே இருக்குமானால் இந்த நாட்டில் இருளென்பதே என்றும் இருக்கமுடியாது."

'நாம் சாதாரணமானவர்கள். எனினும் மகாத்மாஜீ மூட்டிய தெய்வீக அக்னி நம்முள் கொழுந்துவிட்டெரிந்து கொண்டு இருக்கிறது. அந்த தெய்வீக புருஷரை நினைத்து அவர் காட்டிய புனித நெறியில் செல்வோமானால் நம்மால்கூட இந்த நாட்டை ஜோதிமயமாக பிரகாசிக்கும்படி செய்துவிட முடியும்!',

"மகாத்மா தமது சத்தியத்தால் அசத்தியத்தை வென்றார். தமது ஒளியால் இருளை வென்றார் தமது வாழ்க்கையால் மரணத்தை வென்றார். தமது சாவினால் நமக்குப் புதுவாழ்வைத் தந்தார்!"

"சத்தியமே அவர் வாள் என்றால் அஹிம்சையே அவருடைய கேடயம்! அடக்கமே அவர் பலம் என்றால் அன்பே அவருடைய போர்முறை!"

"சொன்ன சொல் காப்பதில் அவர் ஸ்ரீராமர்! முற்றத் துறந்து வாழ்வதில் பகவான் புத்தர்! சேவையிலும் தியாகத்திலும் ஏசுநாதர்! வழி காட்டிச் செல்வதில் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா!"

"மகாத்மாவின் மறைவு தாங்க முடியாத துயரம்! அம் மகானின் பிரிவு மனித சமுதாயமே மறக்க முடியாத பெரும் நஷ்டம்!"

—இப்படியெல்லாம் விதவிதமாகப் புகழ்மாலைகள் போற்றித் திரு அகவல்கள்! வாழ்த்துரை வெண்பாக்கள்!

திரும்பும் பக்கமெல்லாம் காந்திஜி சிலைநாட்டு சடங்குகள், பூம்பொழில்கட்கும் வீதிகட்கும் மாளிகைகட்கும் மண்டபங்கட்கும் அவர் பெயரை சூட்டும் விழாக்கள்! சினிமாக்களில், நாடகங்களில் கவிதைகளில், காவியங்களில் காந்தி புராணம்!

காந்திஜி! காந்திஜி!! காந்திஜி!!!—இதுதான் பார பார்க்கும் திசையெல்லாம்!

எங்கும், எங்கெங்கும், இதே பேச்சு! எங்கும், எங்கெங்கும், உற்சவக் கோலம்!

30-1-49 ஞாயிற்றுக்கிழமை, இந்திய உபகண்டத்தைத் தட்டி எழுப்பிய மாவீரர் காந்தியடிகளார் மறைந்த நாள். அந்த நாளிலே, இந்தியா, குறிப்பாக காங்கிரஸ் இந்தியா, வழங்கிய காட்சி இது!

காந்தியடிகள் மறைந்து ஓராண்டுதான் ஆகிறது. ஆனால் இந்த ஓராண்டுக்குள்ளாகவே அவர் ஒரு தெய்வமாக்கப்பட்டு, அவருடைய மறைந்த நாள் ஓர் உற்சவம் ஆக்கப்பட்டுவிட்டது!

காந்தியடிகள் நம் காலத்தில் இருந்தவர்; நம்மோடு பழகியவர்; நம்மையெல்லாம் நீண்ட கால உறக்கத்திலிருந்து விழிப்புற்றெழுந்து" விடுதலைப் போராட்டம் விளைக்கச் செய்தவர்; வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெட்டிச் சாய்த்த மாபெருந் தலைவர்; ஒப்பற்ற தியாகி. மனிதருள் ஓர் மாணிக்கம் மனிதகுலத்தின் அந்த முடிசூடா மன்னர்! ஆம், ஆனால் தேசீய வாதிகள் 30-1-49-ல் அந்த **வீரர் காந்தியை** மக்கள் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தவில்லை. "ஆத்ம ஜோதி வடிவமாக இருக்கின்ற", "தேஜோமயமான" "சுத்த சுயம்பிரகாச"யான ஏதோ ஒரு **கற்பனை காந்தி**யையே அவர்கள் போற்றினார்கள், புகழ்ந்தார்கள், கொண்டாடினார்கள், துதிபாடினார்கள்!

காந்திஜி ஓர் ஒப்பற்ற அரசியல் தலைவர், காந்திஜி ஓர் உன்னதமான இலட்சிய புருஷர். காந்திஜி அஞ்சாமையின் சின்னம், இந்தியாவின் தந்தை. காந்திஜி தீண்டாமையை ஒழிக்கவந்த தீரர்; தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் அடிமைத்தனத்தை முறியடித்த ஆண்டகை—இவற்றையெல்லாம் எடுத்துப் பேசி, அவர் சென்ற பாதைவழியே செல்லவேண்டும் என்ற ஆர்வத்தை மக்கள் உள்ளத்தில் கிளர்ந்தெழச் செய்தார்களில்லை. மாறாக, உண்ணா விரதம் இருந்தார்கள்! நூல் நூற்பு யக்ஞம் நிகழ்த்தினார்கள்! காந்திஜியின் சிலையை வைத்து மாலைசூட்டி வணங்கினார்கள்! ராம்துன் பாடினார்கள்! தூசுபடிந்துகிடந்த பஜனைப் பெட்டியை பரணையிலிருந்து கீழே இறக்கினார்கள். எவ்வளவு பயனுள்ள காரியத்தைச் செய்திருக்கிறார்கள் இந்த பாரதபுத்திரர்கள்!

இந்தியன் ஒவ்வொருவனும் ஒரு காந்திஜி ஆகவேண்டும்; ஆகமுடியும்; ஆனால்தான் இந்தியா முன்னேற்றப்புரி நோக்கி விரைந்து செல்லமுடியும் என்னும் உண்மையை மக்கள் மன்றத்தில் எடுத்து விளக்கினார்களில்லை அந்த காந்திஜி சிஷ்யர்கள். "காந்திஜி ஒரு தெய்வம்—அவர் ஸ்ரீராமர் போன்றவர்! காந்திஜி ஆண்டவனின் திருவுரு—அவர் கிருஷ்ண பரமாத்மாவை ஒத்தவர்" என்று பொய்யுரை புகன்றனர், ஆகவே காந்தியடிகளை மக்கள் உள்ளத்தினின்று பிரித்தெடுக்க முயன்றனர்!

"நம் தலைவர் காந்திஜி நம் உள்ளத்தோடு உள்ளமாக இரண்டறக் கலந்து நிற்கிறார். ஆகவே நாம் ஒழுக்கத்தோடு நடந்துகொள்ளவேண்டும், நியாயத்தையே நிலைநாட்டவேண்டும், மாற்றுக்கட்சியினரிடமும் அன்பாக நடந்துகொள்ளவேண்டும், நல்லாட்சியை நாட்டில் நிறுவவேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வழிதேடவேண்டும்" என்று அவர்கள் கூறினார்களில்லை. மாறாக காந்தியடிகளாருக்கு வலிந்து வலிந்து புகழ்மாலை சூட்டுவதிலேயும் புகழ்ப்பரணி பாடுவதிலேயும் தங்கள் அறிவையும் ஆற்றலையும் செலவிடலாயினர், ஏதோ இவர்களுடைய புகழுரை பிறந்தால்தான் அந்த உத்தமருடைய உயர்வை உலகத்தார் உணரமுடியும் என்றெண்ணிக்கொண்டு!

"நம்மிலே பலர், காந்தியடிகள் காட்டிய உயரிய நெறிவழி செல்லத் தவறிவிட்டோம், ஒழுக்கத்தின் விழுப்பத்தை உணர்ந்து நடக்க மறந்துவிட்டோம் தவறான வழி என்று தெரிந்திருந்தும் பெர்மிட்டுக்கும் லைசென்சுக்கும் அலைந்து திரிவதிலேயும் அதற்காகக் கைக்கூலி பெறுவதிலேயும், கள்ள வாணிபம் செய்வதிலேயும் ஈடுபட்டுவிட்டோம், நம்மிலே எம். எல். ஏக்களாக இருப்போர் மந்திரிகளாவதற்கு என்ன வழி என்பதிலேயே கவலையாயிருந்தோம், மந்திரிகளாய் இருப்போர் உரிமைக்காகப் போராடிய உத்தமர்களைத் தடியால் அடிப்பதிலேயும் பிடித்துச் சிறையில் அடைப்பதிலேயும் ஓர் ஆனந்தத்தை அடைந்தோம், காங்கிரஸ் கமிட்டிகளில் தலைவர்களாய் இருந்தோர் அந்த பதவியைக் கொண்டு அமைச்சர்களை எப்படி எப்படி நடுங்கவைப்பது என்ற அபூர்வ ஆராய்ச்சியில் ஈடுபட்டோம், நம்மில் பெரிய தலைவர்களாய் இருப்போர், மக்கள் நன்மையை மறந்துவிட்டு, மதோன்மத்தர்களாய் வாழ்ந்துவரும் சமஸ்தானாதிபதிகளிடம் கொஞ்சி விளையாடத் தொடங்கினோம், நம்மில் இதுவரை மக்கள் மன்றத்தில் பாட்டாளிகளின் நண்பராய்க் காட்சி அளித்தோர் இதுபோது முதலாளிகளின் தோழர்களாக மாறி, பிர்லாக்கள் என்ற பலிபீடத்திலே தொழிலாளர்களைப் பலியிட்டோம், நம்மில் தியாகிகளாய் இருந்தோர் இந்த தியாகத்தை காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிக் கிணங்க 5 ஏகர் நிலத்திற்கு விலைபேசத் தொடங்கினோம், நாம் ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதத்திலே காந்தியடிகளாரைக்காட்டிக்கொடுத்தோம்; அவர்காட்டியஇலட்சியப்பாதையில்செல்லமறுத்தோம் இனியேனும் இந்நிலை கூடாது, இது ஆகாது" என்று பேசி இருக்கவேண்டும் கதர்சட்டைதாரிகள், நாட்டுப்பற்று அவர்கள் உள்ளத்தின் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்குமானால் அவர்கள் இப்படித்தான் உள்ளந்திறந்து பேசியிருப்பார், ஆனால் அவர்கள் பேசியது இதனை அல்ல! காந்தியாரே உயரிய வழிகாட்டி என்பதை!! காந்தியடிகள் உயரிய வழிகாட்டிதான்! யார் மறுக்கிறார்கள் அதை! யாரும் மறுக்காத ஒன்றை மீண்டும் மீண்டும் இவர்கள் வலியுறுத்திப் பேசுவானேன்? இவர்கள் எவ்வளவுதூரம் அவர் காட்டிய வழியைப் பின்பற்றியிருக்கிறார்கள்? அது அல்லவா தெரியவா வேண்டும் நமக்கு? அதை அல்லவா இவர்கள் கூறியிருக்கவேண்டும் அவர் காட்டிய நல்வழியை இவர்கள் கடைப்பிடித்து நடப்பவர்களானால்? உண்மையாகவே இவர்களுக்கு உலகப் பெரியார் காந்தியாரிடம் பற்றும் பாசமும், அவருடைய கொள்கை கோட்பாடுகளில் நம்பிக்கையும் உறுதியும் இருக்குமானால் இவர்கள் செய்திருக்க வேண்டிய முதல் காரியம், பட்டி தொட்டிதோறும் சென்று, பாமரரையெல்லாம் கண்டு, அவர்களின் வாழ்க்கையைக் கவ்விக்கொண்டுள்ள வறுமையையும் வாட்டத்தையும் போக்க வழிதேடுவதல்லவா? செய்தார்களா அந்த செவ்விய பணியை? இந்த தேசிய தீரர்களின் வார்த்தையைக் கேட்டு, இந்தியாவுக்கு விடுதலை கிட்டியதும் தங்கள் வாழ்க்கை பூலோக சொர்க்கமாக மாறும் என்று நம்பி, இப்போது, அந்தப்படி நடவாவிட்டாலும் தங்கள் வாழ்க்கை நரகலோக வாழ்க்கையாக இல்லாமல் இருந்தாலே போதும் என்று சொல்லிப் பெருமூச்சு விட்டவண்ணம் செத்தவாழ்வு வாழ்கிறார்களே கிராமவாசிகள்

அவர்களுக்கு ஒரு நல்ல வார்த்தையேனும் கூறினார்களா இவர்கள்? துயர்க் கடலில் நீந்திக் கிடக்கும் தொழிலாளிகளின் துயர் களைய சிறியதோர் திட்டமேனும் வகுத்தார்களா? ஆண்டு பலவாக அளவரிசியால் அல்லல்படும் மக்களுக்கு அந்த துக்கம் தீர ஒரு மார்க்கம், ஒரு வழி, ஒரு முறை காட்டாவிட்டாலும் ஓர் ஆறுதல் மொழியாவது கூறினார்களா? வறுமையால், வாழ்க்கைச் சூறாவளியால், விலைவாசி ஏற்றத்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தால், கருப்பு மார்க்கட் கொடுமையால், ஆதிக்கவாதிகளின் ஆணவத்தால், இன்னும் சொல்லப்போனால், ஆளவந்தார்களின் தப்பிலித்தனத்தால், எம். எல். ஏ.க்களின் தவறிய நடத்தையால், ஏழை மக்களின் கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீர் மீண்டும் பிறவாதிருக்க வழி தேடாவிட்டாலும் போகிறது, அந்தக் கண்ணீரைத் துடைக்கவேண்டுமே என்ற இரக்க உணர்வேனும் எழும்பிற்று இவர்கள் உள்ளத்தில்? ஆம் என்று எந்த மகாத்மாவின் சீடரேனும் நெஞ்சில் கைவைத்துக் கூறமுடியுமா? முடியாதெனில், இவர்கள், சென்ற கிழமை, தலைவர் காந்தியாரின் புகழை தக்ளி நூற்பதன் மூலமும் பஜனை பாடுவதன் மூலமும் பரப்புவதாகப் பாவனை மந்திரம் பலபட உரைத்தார்களே, அது ஏன்? மக்களை ஏமாற்றவா? அல்லவெனில் வேறு எதற்கு?

ஒளித்து மறைத்தோ அல்லது பயந்தோ பதுங்கியோ பேசுவது நம் பண்பல்ல, மரபுமல்ல, ஆகவே கொஞ்சம் வெளிப்படையாகவே கேட்க விரும்புகிறோம், காந்தியடிகள் இயற்கை முடிவெய்தியபின் உள்ள இந்த ஓராண்டு காலத்தில், அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவருடைய அன்பையும் தளராத ஆதரவையும் பெறும் பேறு பெற்றிருந்த காங்கிரஸ், மக்கள் நன்மைக்காக சாதித்த காரியம் இன்னது என்று எந்தக் காங்கிரஸ் தலைவரேனும் கூறமுடியுமா? நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருந்ததாகத் தைரியமாகக் கூறமுடியுமா?

நம் கேள்வி கொஞ்சம் காரமானதுதான்! தெரிகிறது நமக்கு நன்றாக! இந்தக் கேள்வி பலர் உள்ளத்தைப் புண்படுத்தும் தன்மையது என்பதையும் நாம் அறியாமல் இல்லை! என்றாலும் சிலர் அல்லது பலர் உள்ளம் புண்படும் என்ற காரணத்திற்காக எத்தனை நாளைக்கு உண்மையை மறைத்துவைக்க முடியும்? மறைத்து வைத்தால்தான் நிற்குமா? அல்லது மறைப்பதும்தான் நல்லதா?

சர்தார் வல்லபாய் படேல்—அவருடைய காங்கிரஸ் பற்றை யாரும் மறுக்கமுடியாது—இரண்டு கிழமைகட்கு முன்னர், ஆமதாபாத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்:—

காங்கிரஸ் ஊழியர்கள் பெரிதும் சந்தர்ப்பவாதிகளாகிவிட்டனர். ஒவ்வொரு நிலைமையையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கும் தம் நலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விழைகின்றனரே தவிர மக்கள் நலத்திற்குப் பயன்படுத்தச் சிறிதும் விரும்புகின்றார்களில்லை. அதிகார பீடத்தில் அமர்ந்துவிட வேண்டுமென்று ஒவ்வொருவரும் துடியாய்த் துடிக்கின்றனர். அம் முயற்சியில் வெற்றி பெறாதவர்கள் அந்தக் காரணத்திற்காகவே [மக்கள் நன்மையை முன்னிட்டு அல்ல] அதிகார பீடத்தில் உள்ளோரை வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கிவிடுகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோதாவது ஒழுக்க முறைகள் இன்னின்னவை என்று சிற்சில வரையறைகளேனும் இருந்தன. இந் நாளிலோ கிடைக்கும் வாய்ப்புகள் அத்தனையையும் தன்னலம் என்பதற்கே பயன்படுத்த முடிவுகட்டிவிட்டனர் நம் ஊழியர்கள்.''

[சுதேசமித்திரன் 20—1—49]

மகாத்மாவின் உள்ளத்தை சர்தாரைவிட நன்றாக அறிந்தவர்கள் யாரும் இருக்கமுடியாது—'சர்தாரின் மடிமீது என் தலை இருக்க அந் நிலையில் என் உயிர் போகுமானால் அதை நான் பெறற்கரிய பேறு எனவே கருதுவேன்' என்று காந்தியடிகளாராலேயே புகழப்பட்ட பெருமை படைத்தவர் இப் பர்டோலி வீரர்—காந்தியாரின் அத்தியந்த நண்பர் சர்தார், அவர் கூறுகிறார் இதுபோல எனில், இந்த வாசகத்தை, நாம், சர்தாரின் பேச்சு என்றல்ல, காந்தியடிகளின் உள்ளம் என்றே கொள்ளலாம், தப்பில்லை! சந்தர்ப்பவாதிகள், அதிகாரப் பித்தர்கள், தன்னல உருவங்கள், ஒழுக்கத்தை மறந்தவர்கள் என்று இவ்வளவு பலமாக காங்கிரஸ்வாதிகளை அர்ச்சிக்கிறார் சர்தார் படேல்—அதே காங்கிரஸ்வாதிகள்தான், சென்ற கிழமை, பஜனையும் பிரார்த்தனையும் பகவத்கீதை பாராயணமும் பக்த நாமாவளி உச்சாடனமும் செய்துள்ளனர் காந்தியார் நினைவு நாள் என்ற பெயரால்! எவ்வளவு நயவஞ்சகம்!

படேல் மட்டும்தான் ''தேசியத்தம்பி''களை இப்படித் தட்டிக்கொடுக்கிறார் என்பதில்லை, **டாக்டர் பட்டாபி சீதாராமய்யர்** இதைவிட அழகாகவே காங்கிரஸ்காரர்களின் திருக்கலியாண குணங்களைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்!

''துரதிர்ஷ்டவசமாக இந்தியா விடுதலை பெற்றபிறகு காங்கிரஸ்காரர்கள், அதிகார போதையில் மிதப்பவர்களாகிவிட்டனர். விடுதலை எதிர்பாராத காலத்தில் வந்துவிட்டது; நியாயமாக வரவேண்டிய காலத்தைவிட கொஞ்சம் முன்னதாகவே வந்துவிட்டது; நாம் அதை ஏற்றுக்கொள்ள தகுதியற்றிருந்தபோது வந்துவிட்டது. இந்த வெற்றி காரணமாக காங்கிரஸ்காரர்களின் தலை துள்ளுகிறது; அவர்களின் ஒழுக்கம் கெட்டுவிட்டது; அவர்களின் உள்ளம் லஞ்சக்கறை படிந்ததாக ஆகிவிட்டது. இந்த நிலை நீடிக்குமானால் காங்கிரஸ் அழிந்துபோவது உறுதி. எகிப்து நாட்டில் ஜக்லுல் பாஷாவின் கட்சி இப்படித்தான் அழிந்துவிட்டது பத்தாண்டுகளுக்கு முன்பு 520-ல் 480 தொகுதிகளில் எளிதில் வெற்றி பெற்ற அவர் கட்சி, இரண்டாண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற முடியவில்லை. காங்கிரஸ்காரர்களிடம் இன்று பரவியுள்ள ஒழுக்கக்கேடும் நாணயக்குறைவும் நீடிக்குமானால் இதேகதி காங்கிரசுக்கும் நேராமல் போகாது என்பதை அவர்கள் நினைவில் வைக்கட்டும். நம்மைப் பார்த்து ஏற்கெனவே நாட்டு மக்கள் சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

—[மெயில் 14—1—49]

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற டாக்டர் பட்டாபியாவது, சென்னையில் அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கூட்டத்தில் இதுபோல வருத்தத்தோடு **பேசினார்**; ஆனால் தலைவர் தேர்தலில் தோற்றுப் போன ''**ராஜரிஷி**'' **புருஷோத்தமதாஸ் தாண்டனே** காங்கிரஸ்காரர்களிடையே ஊழல்கள் மிகுவதை எண்ணி ஒரு பொதுக்கூட்டத்தில் **அழுதேவிட்டார்** முன்னர் ஓர் முறை! அந்தக் கூட்டத்தைப்பற்றி ''விடுதலை'' அல்ல, ''**தினசரி**'' தந்துள்ள தகவல்

இது: முன்னரே ''போர்வா''ளில் வெளிவந்தது தான் இது என்றாலும் மீண்டும் தருகிறோம் காந்திஜி நினைவு நாள் விழா என்ற நாம் ஓர் ஏமாற்றுத் திருவிழா வாகக் கொண்டாடப்படுகிறது என்பதை விளக்க:

பொதுக் கூட்டத்தில் பாபு தாண்டன் கண்ணீர்

காங்கிரஸ்காரர்களிடையேயும் ஊழல்கள் மிகுவதை எண்ணி மனவருத்தம்

பணத்திற்கும் பதவிக்கும் ஆத்மாவை இழந்துவிட வேண்டாம் என கோரிக்கை

நேற்று முன்தினம் காலையில் ஐக்கிய மாகாண அசெம்பிளி சபா நாயகர் ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டன் ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பேசுகையில், காங்கிரஸ்காரர்களிடையே லஞ்சம், உத்தியோக வேட்டை, சலுகை முதலிய தீய பழக்கங்கள் இருந்துவருவதைப்பற்றி பிரஸ்தாபிக்கையில் கண்ணீர் விட்டுவிட்டார். அவருடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. பேச முடியவில்லை. தொண்டையும் கம்மி தவித்தார். காங்கிரஸ்காரர்களிடையேயும் இப்படி ஊழல்கள் இருந்துவருவதைப் பற்றிக் கூறும்போது சபாநாயகர் ஸ்ரீ தாண்டன் அவ்வளவு மன வேதனையை அடைந்தார்.

பிறகு ஸ்ரீ. தாண்டன் மெதுவாக சமாளித்துக் கொண்டு தளதளத்த குரலில் கீழ்வருமாறு கூறினார்:—

''இதுதானா சுயராஜ்யத்தினால் அடைந்த சன்மானம்? இதற்காகத்தானா நாம் இத்தனை காலம் போராடி, எவ்வளவோ கஷ்டங்களையும் பட்டு உயிர்களையும் பலி கொடுத்தோம்? என்னுடனிருந்த தேச பக்தர்கள் இவ்வளவு கேவலத்திற்குக்கூடப் போய்விடுவார்கள் என்பதை நான் அறிந்திருப்பேனேயானால், அடிமையாக இருப்பதே மேல் என்று இருந்திருப்பேன். தேசத்தின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள், தேசாபிமானிகள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடையே ஊழல்கள் மிகுந்திருக்கின்றன என்பதைப் பற்றி நான் கேள்விப்படும்போது என் நெஞ்சம் குமுறி அழுகிறது. பணத்தையோ பதவியையோ பெறுவதற்காக ஆத்மாவை இழந்துவிட வேண்டாம் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

இக் கூட்டத்தில் ஸ்ரீ. புருஷோத்தம தாஸ் தாண்டன் பன்முறை அழுதுவிட்டார். இந்த வயோதிகர் இவ்விதம் கண்ணீர்விட்ட காட்சி எல்லோருடைய மனதையும் உருக்கிவிட்டது. யோக்கியமாக நடந்து கொள்ளத் தவறிவிட்ட காங்கிரஸ்காரர்களில் சிலரும் அக் கூட்டத்தில் இருக்கவே, ஜனங்கள் அத்தகையவர்களை நோக்க ஆரம்பித்துவிடவே, அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தலைகுனிய வேண்டியதாயிற்று.

பாபு தாண்டன் ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவரான திலிருந்து, பல காங்கிரஸ்காரர்கள் முறை தவறி நடந்துகொள்ளுகிறார்கள் என்று அவருக்கு அநேக புகார்கள் வந்துகொண்டிருந்தன. இதனால் அவர் அதிகமாக மனம் நொந்துபோயிருந்தார். ''காங்கிரஸ்காரர்கள் செய்யும் தவறைப் பற்றிய புகார்களை என் முகத்தில் வீசும்போது வெட்கத்தால் என் தலை நாணுவதுடன் மனம் பதறுகிறது'' என்றும் கூறினார்.

—தினசரி 7-9-48, பக்கம் 5 கலம் 5, 6.

வெற்றிபெற்ற பட்டாபி, காங்கிரஸ்காரர்களைப் பார்த்து நாடு சிரிக்கிறது, ஊழல், காங்கிரஸ்காரர்களிடம் அவ்வளவு அதிகமாகிவிட்டது என்று மனம் நொந்து பேசுகிறார். **தோற்றுப்போன தாண்டன்**, காங்கிரஸ்காரர்களின் தவறு பற்றிய புகார்களைக் கேட்கும்போது என் தலை நாணுகிறது, உள்ளம் குமுறுகிறது என்று கூறுகிறார்! வென்றவரும் தோற்றவரும் வேறு எந்தப் பிரச்சினையை முன்னிட்டு தலைவர் தேர்தலில் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டார்களோ தெரியவில்லை, ஆனால் காங்கிரஸ்காரர்களிடம் ஊழல் மிகுந்துவிட்டது என்னும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இருவர் கருத்திலும் சிறிதும் வேற்றுமையே காணோம்!

படேலும் பட்டாபியும் தாண்டனும் தலைவர்கள்! ஆகவே காங்கிரசின் பரிதாபகரமான வீழ்ச்சி முழுமைக்கும் காரணம் தொண்டர்களிடையே மலிந்துள்ள ஒழுக்கக்கேடுதான் என்று ''வாய்சுளுவாகக்'' கூறிவிடுகின்றனர். ஆனால், ''காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணம் அதுமட்டுமே அல்ல, மகாத்மா காட்டிய பாதையில் செல்ல, **தலைவர்களே, வேண்டுமென்றே** தவறிவிட்டனர் அதுதான் உண்மைக் காரணம்'' என்று ஊழியர்கள் சார்பிலே பேசுவதாகக் கூறிக் கொள்ளும் ஆரிய ஏடு **சுதந்திரா** அதனுடைய 4-9-48 இதழிலே கூறியிருக்கிறது.

'சுதந்த்ரா' தலைபங்கத்தின் சில பகுதிகள் இவை:—

''மகாத்மா காந்தியின் வாழ்க்கை உபதேசங்களுக்கும் சாதனைகளுக்குமுரிய அடிப்படை உண்மைகளாக அமைந்து கிடந்த தத்துவங்கள் அத்தனையையும், காங்கிரஸ் ஊராளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே அடியோடு உதறித் தள்ளிவிட்டது என்பது உண்மை.

''விடுதலைப் போராட்டத்தில் வெற்றி கிட்டியதும் காங்கிரசுக்கு முன்னால் இரண்டு வழிகள் தென்பட்டன. ஒரு வழி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தேவையான போர் முறைகளை மகாத்மா எந்த சத்தியாக்ரகம் எனும் சக்திபிடமிருந்து பெற்றாரோ அதே சத்தியாக்கிரகத்தின் ஆற்றலை விடுதலை பெற்ற இந்தியாவில் நிலை காட்டிக் காண்பிப்பது. மற்றொரு வழி காந்தீயத்திற்கு ஒரு ''சலாம்'' போட்டுவிட்டு, அதனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு அதை விட்டு விலகி, உலகம் எங்கணும் சர்வ சாதாரணமாகக் கையாளப்படுகின்ற அரசியல் ராஜதந்திர சூழ்ச்சிகளில் இறங்கி விடுவது. காங்கிரஸ், இந்த இரண்டாவது வழியைத்தான் **வேண்டுமென்றே** தெரிந்தெடுத்து பின்பற்றத் தொடங்கிற்று. **காந்தீய இயக்கத்தின் அரசியல் வெற்றிக்கான விழா கொண்டாடப்பட்ட அதே நேரத்தில் மகாத்மாவின் பிரதம சிஷ்யர்களே அவரை அடியோடு கைவிட்டு விட்டார்கள்!** இந்த நிகழ்ச்சிகள் தான் மகாத்மாவின் உள்ளத்தில் 'சாகும் வரை உண்ணாவிரதம்' தொடக்கலாமா என்ற எண்ணத்தை அவருடைய இறுதிக் காலத்தில் தொடர்ச்சியாக எழுப்பிக் கொண்டே இருந்தது. கடைசியில்

(5-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவேண்டும் என்று முயன்று வந்தனர்—முயற்சி பலிக்கவில்லை. பிறநாட்டு அறிவியல் அறிஞர்கள் பலர் உள்ளத்தையும் இதே பிரச்சினை ஒரு நூற்றாண்டு காலமாக வாட்டி வதைத்து வந்தது. என்றாலும் நற்பயன் விளையவில்லை! ஆடோஸ்லரோசிஸ், ஆயிரமாயிரவரை, தன் கொடிய சாம்ராஜ்யத்தில் அமைந்துள்ள செவிட்டுச் சிறைச்சாலையில் தள்ளுவதில் மும்முரமாக ஈடுபட்டுவந்தது—அதை அடக்க எந்த விஞ்ஞானியாலும் முடியவில்லை! தன்னை ஒழித்துக்கட்டவேண்டுமென்று துடிதுடிப்புடன் முன்வந்து தாக்கிய பல விஞ்ஞானிகளையும், ஆடோஸ்லரோசிஸ், மடமடவென முறித்து வீழ்த்துவிட்டது. அதன் கொடி, பல நூற்றாண்டுகளாகவே, செவிட்டுக் கோட்டை மீது கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது! அந்தக் கொடியை அகற்றிவிட்டு விஞ்ஞானக்கொடியை அதே இடத்தில் உயர்த்தவேண்டுமென்று முயன்றவர் பலர்; ஆனால், வென்றவர் இலர்!

* * *

மனித உடல் ஓர் அற்புதமான இயந்திரம். அந்த இயந்திரத்தின் ஓர் அற்புதமான பகுதி, காது! காது நமக்கு நன்றாகக் கேட்கிற வரையில் காது ஓர் அற்புதமா என்றுதான் கேட்கத் தோன்றும் நமக்கு! ஆனால் செவிப்புலன் இழந்தவர்களைக் கேட்டால் அவர்கள் சுவைபடக் கூறுவர், காது எங்களை உலகத்தை நம் உள்ளத்துடன் தொடர்புபடுத்தும் ஜன்னலாக இருக்கிறது என்னும் உண்மையை! விஞ்ஞானப் புத்தகத்தைக் கேட்டாலும் இதே உண்மையை இன்னும் தெளிவாக அது கூறிவிடும்.

சாதாரணமாக, காது என்று சொன்னவுடனே, நம் மனதில் தோன்றும் வடிவம் தலையின் இருபுறத்திலும் சின்னஞ்சிறு முறம் போலக் காணப்படுகின்ற உறுப்பின் தோற்றம்தான். ஆனால் காது என்பது அந்த உறுப்பு மட்டுமே அல்ல—அந்த உறுப்பு காதின் வெளிப்பகுதி மட்டும்தான். காதின் பிற பகுதிகள்—முழுப் பகுதிகள் தலையின் உள்ளே இருக்கின்றன. புறத்தே இருக்கும் காரணத்தால் காதின் வெளிப்பகுதியினை **புறச்செவி** என்று அழைப்பர் விஞ்ஞானிகள். விசித்திரமான உருவம் படைத்த அந்த உறுப்பின் நடுவே கொஞ்சம் அகலமான துவாரம் ஒன்று காணப்படுகின்றதல்லவா, அந்த துவாரம் கால்வாய் ஒன்றின் ஆரம்பம், அந்தக் கால்வாய் வழியாகத்தான் வெளியே தோன்றும் ஒலிகள், உள்ளே "மூளை" இருக்கும் இடம் நோக்கிப் பயணம் செய்யவேண்டும், அதை வேண்டுமானால் **செவிப் புலன் கால்வாய்** என்று குறிப்பிடலாம், அந்தக் கால்வாயின் உட்புறத்துக் கோடியில், மிக மெல்லிய தசைநாரால் ஆன ஒரு சுவர் குறுக்கு வாட்டத்தில் நிமிர்ந்து நின்று அந்தக் கால்வாயை முற்றிலும் மூடிவிடுகிறது. அந்த **செவிச் சுவர்** சாய்வானதோர் வண்டிச் சக்கரம் போன்ற உருவுடன் காணப்படுகிறது. [படத்தைக் காண்க. படத்தில் 3 என்று குறிப்பிட்டுள்ள பகுதியே செவிச் சுவர்.] இந்த செவிச் சுவரின் பின்னே, இந்தச் சுவரைத் தொட்டுக் கொண்டு சம்மட்டிபோன்ற உருவுடைய ஒரு சிறு எலும்பும், அந்த எலும்பைத் தழுவிய வண்ணம் அதனை அடுத்து மற்றொரு சிறு எலும்பும், அந்த இரண்டாவது எலும்பைத் தடவிய வண்ணம் [ ] இதுபோன்ற வடிவம் படைத்த மூன்றாவது எலும்பு ஒன்றும் [படத்தில் 2 என்று குறிப்பிட்டுள்ள அம்புக்கு நேர் எதிரில் காணப்படுவதே மூன்றாவது எலும்பு] ஆக மூன்று சிறு எலும்புகள் அமைந்துள்ளன. இந்த மூன்று சிறு எலும்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள பகுதி, படத்தைப் பாருங்கள், கிட்டத்தட்ட முட்டைவடிவமுடைய ஒரு சிறு பெட்டி போன்ற தோற்றத்துடன் காணப்படுகின்றது. இந்தப் பெட்டிக்குத்தான் **இடைச்செவி** என்று பெயர். இந்த இடைச்செவிப் பெட்டியின் மேற்புறமும் கீழ்ப்புறமும், மீண்டும் படத்தைப் பாருங்கள், வளைவாகக் காணப்படும் இரு எலும்புகளாலும், பக்கவாட்டில், ஒரு பக்கம், **செவிச் சுவராலும்**, அதற்கு நேர் எதிர்ப்பக்கம் நீளமானதோர் பலத்த எலும்பினாலும் அமைக்கப்பட்டுள்ளன. நீண்டு வளர்ந்துள்ள இந்த எலும்பின் நடுவே ஒரு சிறு துவாரம் உள்ளது. நாம் முன்னே குறிப்பிட்ட மூன்று சிறு எலும்புகளில் மூன்றாவது எலும்பின் அடிப்பாகம் இந்த துவாரத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது—முற்றிலும் அல்ல! மேலும் கீழும் மிக மிக மெல்லிய இடைவெளிவிட்டு! [2 என்று குறிப்பிட்டுள்ள அம்புக்குறிக்கு எதிரில் இந்த துவாரம் இருப்பதையும், துவாரத்தை அடைத்துக்கொண்டு [ ] இக்குறி உள்ள மூன்றாவது எலும்பின் அடிப்பாகம் அமைந்திருப்பதையும், அந்த அடிப்பாகத்தின் மேலும் கீழும் மெல்லிய இடைவெளி இருப்பதையும் படத்தில் காண்க.] இந்தப் பகுதிகளையெல்லாம் தாண்டி, உள்ளே, இன்னும் பின்னே, இருப்பது **உட்செவி**



செவி

1. செவிப் புலன் கால்வாய்
2. மூன்றாவது எலும்பு இடையில் பொருந்தியுள்ள பகுதி
3. செவிச்சுவர் [Eardrum]

என்று சொல்லப்பட்ட பகுதி. [இது படத்தில் இல்லை] அங்கேதான் மூளையிலிருந்து வந்துள்ள செவிப்புலன் நரம்புகள் மெல்லிய சிற்றிழைகளாகப் பரந்து படர்ந்து ஒருவகையான நீர்ப் பொருளில் மிதந்து கிடக்கின்றன.

செவிக்கு வெளியே ஏதேனும் ஓர் ஒலி எழுந்தால் அந்த ஒலி அலைகள் உடனே **புறச்செவியில்** உள்ள துவாரத்தின் வழியாகப் புகுந்து, **செவிப் புலன் கால்வாய்** வழியே சென்று, கால்வாயின் முடிவில் உள்ள **செவிச்சுவர்** என்னும் தசையைத் தாக்குகிறது. தாக்குண்டதும் செவிச்சுவர் துடிக்கிறது. செவிச்சுவரின் துடிப்பு, செவிச்சுவரை ஒட்டியும் தழுவியும் உள்ள மூன்று சிறு எலும்புகளையும் முறையே துடிக்கவைக்கிறது. அந்தத் துடிப்பு, மூன்றாவது எலும்பு, அதன் அடிப்பாகத்தைப் பொருத்திக்கொண்டுள்ள நீண்ட பெரிய எலும்பைத் துடிக்கவைக்கிறது. அந்தப் பெரிய எலும்பின் துடிப்பு, உட்செவியில் உள்ள நீர்ப்பொருளையும், அந்த நீரிலே மிதந்துகிடக்கும் நரம்பு இழைகளையும் துடிக்க வைக்கிறது. இந்த நரம்பு இழைகள் தம்மீது பட்ட இந்த ஒலித் துடிப்புகளை நேரே மூளைக்குக் கொண்டு செல்கின்றன. உடனே மூளை வெளியே ஏற்பட்ட ஒலியை உள்ளது உள்ளபடி உணர்ந்து கொள்கிறது. ஒருவர் நம்முடன் பேசிக்கொண்டிருக்கும்போது நாம் சாதாரணமாக அவர் அருகே உட்கார்ந்துகொண்டு மிக மிக சாதாரணமாக அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அப்படிக் "கேட்டுக்கொண்டிருப்பது" என்பதற்குள்ளே இவ்வளவு அதிகமான செயல் முறைகள் அடங்கியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தால் யாருக்குத்தான் வியப்பு தோன்றாமல் இருக்கமுடியும்?

* * *

வெளியே புறச்செவியில் நுழையும் ஒலி அலைகள் உள்ளே எங்கேயோ உள்ள "மூளை"யைச் சென்று தாக்கும் வரையில் எத்தனையோ உறுப்புகளைத் தொட்டுக்கொண்டே செல்லவேண்டியிருக்கிறது. இடையே உள்ள எல்லா உறுப்புகளும் சிறிதும் பழுதின்றி இருந்தால்தான், ஒலி அலைகள் தம் பயணத்தை முற்றிலும் முடித்து மூளைக்குச் செல்ல முடியும்! அதாவது, அப்போதுதான் காது கேட்கும்! பல்வேறுபட்ட இந்த உறுப்புகளில் ஏதேனும் ஒரு முக்கியமான உறுப்பு கெட்டுவிட்டாலும் ஒலி அலைகள் தம் பயணத்தை முடிக்க முடியாது—காது கேளாது! **செவிச்சுவர்** தன் ஆற்றலை இழந்துவிடலாம், அதனை அடுத்துள்ள மூச்சிறு எலும்புகள் பழுதுபடலாம், அல்லது மூளையிலிருந்து உட்செவிக்கு வரும் செவிப்புலன் நரம்புகள் தளர்ச்சியடையலாம், அல்லது இடைச்செவியிலிருந்து தொண்டைக்குச் செல்லும் யூஸ்டேச்சியன் கால்வாயின் வாய் அடைபட்டுவிடலாம், இவற்றில் எது நிகழ்ந்தாலும் சரி, செவி, தன் ஆற்றலை இழந்து விடுவது உறுதி.

ஆடோஸ்லரோசிஸ்—அமெரிக்கரிடையே மிக அதிகமாகப் பரவியுள்ள நோய்—இடைச்செவியிலே உள்ள மூன்றாவது எலும்பில் ஏற்படும் கோளாறு காரணமாக வருவது. இந்த மூன்றாவது எலும்பின் அடிப்பாகம் ஒரு நீண்ட எலும்பின் நடுவே உள்ள துவாரத்தில் பொருத்தப்பட்டிருக்கிறதல்லவா, அப்படிப் பொருத்தப்பட்டிருப்பதும் துவாரத்தை அடியோடு அடைத்துவிடும் வகையில் இல்லாமல் மேலும் கீழும் மிக மெல்லிய இடைவெளி விட்டுப் பொருத்தப்பட்டிருக்கிறதல்லவா, அந்த இடைவெளி, **எலும்பின் வளர்ச்சி காரணமாக** எப்போதாவது முற்றிலும் அடைபட்டுவிட்டால், ஒலி அலைகள், உள்ளே இருக்கும் செவிப்புலன் நரம்பிழைகளை அடைய முடியாது—ஆகவே காது கேளாது. இந்த நோய்க்குத்தான் ஆடோஸ்லரோசிஸ் என்று பெயர். இந்த நோய் தீரவேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி அடைபட்டுப்போன அந்த இடைவெளியை மீண்டும் திறந்துவிடுவது. இந்தத் "திறப்பு விழா"வை எப்படியேனும் செய்தே தீரவேண்டும் என்று எத்தனையோ விஞ்ஞானிகள் எவ்வளவோ முயன்று பார்த்தனர் இந்த ஒரு நூற்றாண்டு காலமாக ஆனால் முடியவில்லை! அது என்ன அரசியல் மாநாட்டுத் "திறப்பு விழா"வா அவ்வளவு எளிதில் முடிந்துவிட!

1876-ல் **கெஸ்ஸல்** என்னும் ஜெர்மன் டாக்டர் இந்த ஆடோஸ்லரோசிஸ் என்னும் ஹிட்லரை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தினார், ஆனால் போர் வெற்றிபெறவில்லை. தோல்வியே அவரைத் தழுவியது.

"3-வது எலும்பின் அடிப்பாகத்தின் மேலும் கீழும் உள்ள இடைவெளி அடைபட்டதால்தானே செவிட்டுத்தனம் வளர்கிறது, இதோ அந்த இடைவெளியை மீண்டும் உண்டு பண்ணுகிறேன்" என்று முழக்கமிட்டார் கெஸ்ஸல். "ஆபரேஷன்" மூலம் இடைவெளியை உண்டுபண்ணவும் செய்தார். காது, கேட்கவும் செய்தது! ஆனால் சில நாட்களில் மீண்டும் இடைவெளி அடைத்துக் கொண்டது; செவிட்டுத்தனமும் திரும்பிவிட்டது!

ஹோம்கிரேன்—ஸ்விடன் நாட்டு விஞ்ஞானி, ஆபரேஷன் மூலம் திறந்துவிடப்பட்ட இடைவெளியில் ஒரு "ப்ளாஸ்டிக்" தகட்டினைப் பொருத்தி அந்த இடைவெளியை மீண்டும் மூடிக்கொள்ளாதபடி செய்துவிடப் பார்த்தார். ஆனால் அப்படி வைக்கப்பட்ட "ப்ளாஸ்டிக்" கைச்சுற்றி தசைகள் புதிதாக வளர்ந்து முன்னிலும் அழுத்தமாக இடைவெளியைமூடிவிட்டன.

"ஸ்வீடனால் முடியாததை பிரான்ஸ் சாதிக்க முடியும், ஆம்! நிச்சயம்!" என்று சொல்லிக்கொண்டே போர்க்களத்தில் இறங்கினார் **சோர்டிம்** என்ற பிரஞ்சு விஞ்ஞானி. அவர் சிலந்திவலையின் இழைபோல அவ்வளவு மெல்லிய தோல்பட்டை ஒன்றை, புதிதாகத் திறக்கப்பட்ட இடைவெளியின் மீது பொருத்தி வைத்து, இடைவெளி மீண்டும் மூடிக்கொள்ளாதபடி செய்தார். ஆனால் இந்த முயற்சியும் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை! சில பலநாள் கழித்து, இடைவெளி மூடிக்கொள்ளவே செய்தது!

• ஆபரேஷன் செய்யும்போது, இரத்தம் ஒரு துளி சிந்தி அது கட்டிப்போய்விட்டாலும் அதனைச் சுற்றி தசை வளர்ந்து மீண்டும் இடைவெளியை மூடிவிடுகிறது என்பதைக் கண்டறிந்த பல விஞ்ஞானிகள் முற்றிலும் இரத்தத் தொடர்பற்ற ஆபரேஷனை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள். என்றாலும் பலனில்லை—இடைவெளி மூடிக்கொள்ளாமல் இருக்கவில்லை. எவ்வளவோ பேர் எதிர்த்தும் தோல்வியுறாமல் வெற்றிமேல் வெற்றி பெற்றுக்கொண்டே வந்த ஹிட்லரைப் போல, ஆடோஸ்லரோசிஸ், எந்த விஞ்ஞானிக்கும் பணிந்துகொடுக்க மறுத்துவிட்டது.

1938! எவருக்கும் பணியாத

ஆடோஸ்லரோசிசைப் பணிய வைக்க என்றால் முடியும் என்று மார்தட்டிக் கூறினார் நியூயார்க் டாக்டர் **ஜோஸப் ஜூலியஸ் லெம்பர்ட்**! கூறினரா, இல்லை, பணிய வைத்தே காட்டினார், வெற்றிக் கொடி நாட்டினார்! மலைபோல் எழுந்த எதிர்ப்பை எல்லாம் மடமடவென முறித்துத் தள்ளி வந்த ஹிட்லரின் கோட்டைகள் "ஸ்டாலின்கிராட்" போராட்டத்தின் போது சடசடவெனச் சரிந்து வீழ்ந்தனவே கீழே, அதுபோல, ஆடோஸ்லரோசிஸ், **ஜூலியஸ் லெம்பர்ட்டின்** தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் தவிடுபொடியாகி விட்டது.

அவருக்கு முன்னே, ஆடோஸ்லரோசிசை அடக்கமுயன்ற ஒவ்வொரு டாக்டரும் மூடிக்கொண்ட இடைவெளியையே திறக்க முயன்றனர், ஆனால் இவரோ முற்றிலும் புதியதோர் முயற்சியில் இறங்கினார், மற்றவர்கள் நினைக்கவும் செய்யாத அற்புதத்தைச் செய்து காட்டினார்! ஆகவே நிலையான வெற்றி பெற்றார், எண்ணற்றோர்க்கு இழந்த இன்பத்தை மீண்டும் பறிபோகா வண்ணம் மீட்டுத் தந்தார்!

டாக்டர் லெம்பெர்ட், மூடிக்கொண்டுவிட்ட இடைவெளியைத் திறக்காமல் விட்டுவிடுவதுதான் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார் ஆனால் இடைவெளியைத் திறக்காமல் விட்டுவிட்டாலோ காது கேட்காது—ஆகவே இடைவெளியைத் திறந்தே ஆகவேண்டும்! இந்தச் சிக்கலான பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதுபற்றி டாக்டர் லெம்பெர்ட் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தார், அதற்கான எத்தனையோ ஆராய்ச்சிகளை நிகழ்த்தியும் பார்த்தார். சிந்தனையும் ஆராய்ச்சியும் நீண்ட நாட்கள் அவரை ஏமாற்றியே வந்தன. ஆனால் ஒரு நாள்—அந்த நாள் 12 ஆண்டுகட்குப் பின் வந்தது—அவர் அந்த இரண்டையும் ஏமாற்றிவிட்டார். சிக்கல் தீர, வழி ஒன்று கண்டு பிடித்தார்.

அவர் கண்ட புதுவழி இதுதான்: **புதிய இடைவெளி ஒன்றைத் திறப்பது!** ஆச்சரியமான முடிவு! பழைய இடைவெளிக்குக் கொஞ்சம் மேலே, நீண்டு வளர்ந்துள்ள எலும்பில், ஆபரேஷன் மூலம் புதிய இடைவெளி ஒன்றை அவர் உண்டுபண்ணினார். மனிதர்களின் பல்லிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கூரிய சிறு முள் ஒன்றைக் கொண்டு இந்த ஆபரேஷனை அவர் செய்து முடித்தார். பிறகு தங்கத்தாலான மெல்லிய முள் ஒன்றைக் கொண்டு இந்தப் புதிய ஜன்னலை ஒழுங்குபடுத்தினார். கடைசியில், ஆபரேஷன் செய்தபோது சிதறி விழுந்திருக்கக்கூடிய ஒவ்வொரு எலும்புப் பொறியையும் அப்புறப்படுத்தினார். வெற்றி அவர் காலடியில் வந்து வீழ்ந்தது. அவரால் திறக்கப்பட்ட புதிய இடைவெளி மூலமாக வெளியிலிருந்து வரும் ஒலி அலைகள் உள்ளிருக்கும் நரம்பிழைகளை அடைய முடிகிறது, ஆகவே செவிட்டுத்தனம் நீங்குகிறது. 1943க்குள்ளாக 1400 பேருக்கு இந்த "**ஜன்னல் ஆபரேஷன்**" செய்தார், இழந்த செவிப்புலனை மீட்டுத் தந்தார். அவர் செய்ததோடு மட்டுமின்றி 30 சிறந்த டாக்டர்களுக்கும் இந்த அரிய முறையைக் கற்றுக்கொடுத்து எண்ணற்ற செவிடர்களின் செவிட்டுத்தனத்தைப் போக்கினார். டாக்டர் லெம்பர்ட்டின் சிகிச்சையால் இழந்த காதுகளை மீண்டும் பெற்று "இன்பபுரி"யில் உலவத்தொடங்கிய ஆயிரமாயிரம் அமெரிக்கரில் ஒருத்தியே கட்டுரைத் துவக்கத்தில் கூறப்பட்ட இளம் பெண் மிஸஸ் மேரி ஜார்ஜ்.

"அந்த அற்புதமான ஜன்னல் ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தபிறகு என் செவியிலே வந்து பாய்ந்த முதல் ஒலி, பீதோவன் சங்கீதம் போலல்லவா என்னை இன்பபுரிக்கு இழுத்துச் சென்றுவிட்டது! அடி அம்மா! எவ்வளவு சந்தடி செய்கிறது இவ்வுலகம்! இவ்வளவையும் கேளாமல் எத்தகைய அந்தகாரத்தில், ஆழ்ந்து கிடந்தேன் நான் செவிடாக இருந்தபோது!"

மேரி கூறினாள் இதுபோல! மேரி மட்டுமா, இழந்த செவிகளைப் பெற்ற எவரும்தான் இதுபோல் கூறுவர்! இழந்த செவிகளை மீட்டும் பெறுவது இழந்த காதலை அடைவது போன்றதுதானே! களிப்பு, உள்ளத்தைத் தாக்காமலா இருக்கும்!

* * *

அங்கே, மேனாடுகளில் இவ்வண்ணம், கேளாத செவிகளையும் கேட்க வைக்கிறார்கள், அதற்கான ஆராய்ச்சிகளையும் ஓயாமல் நிகழ்த்துகிறார்கள்! ஆனால் நாமோ, இங்கே, "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று இன்னமும் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

செவிடர்களையும் கேட்கவைக்க முடியும் என்று எக்காளமிடுகிறார்கள் அவர்கள் நாமோ அன்று எழுதியதை அழித்தெழுத யாரால் முடியும் என்று வேதாந்தம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அவர்கள்—அங்கே!

நாம்—இங்கே!

இடையே எத்தனை தூரம்!

அவர்களும் நாமும் ஒரே காலத்தில்தான் வாழ்கிறோம், என்றாலும் எவ்வளவு வித்தியாசம்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது கருஞ்சட்டை! இது, சென்ற ஆண்டு! இந்த ஆண்டோ ரா. சு. சே. சங்க மாணவர்க்கெல்லாம் விடுதலை! திராவிட மாணவர்க்கு மட்டும் கடுங்காவல் தண்டனை! காரணம், நாம் முதலிலேயே குறிப்பிட்டோம், அவர்கள் பிராமணர்கள், இவர்கள் சூத்திரர்கள்! **ஒரு கட்சிக்கொரு நீதி—சென்ற ஆண்டு! ஒரு குலத்துக்கொரு நீதி—இந்த ஆண்டு!** மனுதர்மம்—அதன் முழு உருவில் ஆனால் புதிய பதிப்பில் நாட்டிலே நடமாடத் தொடங்கிவிட்டது! இனி அதன் நச்சுப்பல் நாடெங்கும் விஷத்தைப் பொழிவது திண்ணம்—நிலைமை முற்றுமுன்னால் நல்லறிவாளர்கள் ஆவன புரிதல் வேண்டும்.

st Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Ho